யாழ்ப்பாணம்
பது
யாழ்ப்பாண பொதுநூலகம்

## ★ மேற்கு நாடுகள் மீது 'பிரேமா' பாய்ச்சல்

(கொழும்பு)
மனித உரிமைகள் தொடர்பாக மேற்குலக நாடுகள் ஸ்ரீலங்கா அரசுக்கு கொடுக்கும் அழுத்தங்களை ஜனாதிபதி ஆர். பிரேமதாசா வன்மையாக கண்டித்துள்ளார்.
இதேவேளை ஆசியன் நாடுகளைச் சேர்ந்த தூதுவராலய

(4ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5.00

# ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 வைகாசி 8 இதழ் 100
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 21 — 05 — 1992

### வற்றுப்பளை சம்பவம்
## ராணுவம் மறுப்பு

(கொழும்பு)
வற்றுப்பளையில் புலிகளின் முகாம் மீதே தாம் தாக்குதலை நடத்தியதாகவும், இந்து ஆலயம்மீது தாக்குதல் நடத்தவில்லை என்றும் இராணுவ பேச்சாளர் ஒருவா நேற்று தெரிவித்தார்.
வற்றுப்பளை அம்மன்

(4-ம் பக்கம் பார்க்க)

### 'யுனிசெப்' அதிகாரிகளை
## ராணுவம் தடுத்தது

[வவுனியா]
''யுனிசெப்'' தலைமையகமான ஜெனிவாவிலிருந்து ..ன்னருக்கு விஜயம் மேற்கொண்ட 'யுனிசெப்' பிரதிநிதிகள் வவுனியா இராணுவ தடைமுகாமில் டுக்கப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன. (க)

### ராஜீவ்காந்தி கொலை வழக்கு
# குற்றப் பத்திரம் தாக்கலானது
# பிரபாகரன் பிரதான குற்றவாளி

(சென்னை)
ராஜீவ் காந்தி கொலை வழக்கில் பிரதான குற்றவாளியாக விடுதலைப் புலிகள் தலைவர் திரு. பிரபாகரன் மீதும் அடுத்த குற்றவாளிகளாக உளவுப் பிரிவுக் தலைவா 'பொட்டு அம்மானும்' அகிலாவும் காணபபட்டு இவர்கள் மீது நீதிமன்றில் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இதுபற்றி மேலும் தெரிய வருவதாவது;
ராஜீவ் காந்தி கொலை வழக்கின் முக்கிய குற்றவாளிகளில் பெரும்பாலானோ விடுதலைப் புலிகள் இ க்கத்தைச் சேர்ந்தவர்கள என்று நேற்று நீதிமன்றில் முறைப்படி குற்றப் பத்திரிகை தாக்கல செய்யப் பட்டுள்ளது.
400 பக்கங்களை கொண்ட குற்றப் பத்திரிகை நீதிமன்றில் தாக்கல் செய்யபப்பட்டுள்ளதாகவும் குற்றம் சாட்டப் பட்ட 41 குற்றவாளிகளில் 26 பேர் இலங்கைத் தமிழர் எனவும் 15 பேர் இவர்களது இந்திய ஒத்துழைப்பாளர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
பிரதான குற்றவாளியா . விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனும் இவரையடுத்து உளவுப் பிரிவுத்தலைவர் பொட்டு அம்மான் துணைத்தலைவர் அகிலா ஆகியோர் 2-வது 3-வது குற்றவாளிகளாக சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர்
மொத்த குற்றவாளிகளில் 12 பேர் இறந்து விட்டனர் எனவும் இவாகளில் 10 பேர்

(4-ம் பக்கம் பார்க்க)

## பிரபாவை இலங்கை ஒப்படைக்காது

[புதுடில்லி]
புலிகள் தலைவர் பிரபாகரனை இந்தியாவிடம் இலங்கை அரசு ஒப்படைக்காது எனவும், இவ்வாறான ஒரு நிலை இலங்கையிடம் இல்லை எனவும் புதுடில்லியில் உள்ள பி.பி.ஸி. நிருபர் திரு. சாம் மில்லர் தெரிவித்துள்ளார்.

(4ம் பக்கம் பார்க்க)

## தெரிவுக்குழு கூடவில்லை;
### திகதி குறிப்பிடாது ஒத்திவைப்பு

[கொழும்பு]
இனப்பிரச்னை தீர்வு குறித்து நேற்றுமுன்தினம கூடி தமது முடிவை அறிவிக்க இருந்த நாடாளுமன்ற தெரிவுக்குழு அன்றையதினம் கூடவில்லை.
தெரிவுக்குழுவின் நேற்று முன்தினக்கூட்டம் மறுதிகதி குறிப்பிடப்படாது திடீரென ஒத்திவைக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(4-ம் பக்கம் பார்க்க)

### கொலைத் திட்டம் இந்தியாவில் தீட்டப்பட்டது

(புதுடில்லி)
விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த தனு என்பவர் இடுப்பில் குண்டு வைத்து ர் மனிதக் குண்டாகப் பயன் படுத்தப்பட்டது, குற்றவியல்

(4ம் பக்கம் பார்க்க)

## மூன்று தமிழர்கள் சுட்டுக் கொலை

(மட்டக்களப்பு)
மட்டக்களப்பு கதிரவெளிப் பகுதியில் வீதித்தடைகளை அகற்ற வந்த ஸ்ரீலங்காப் படையினர் 3 தமிழர்களை அண்மையில் சுட்டுக் கொன்றுள்ளதுடன் பலரை கைது செய்து முகாமிற்கு கொண்டு சென்றுள்ளனர்.
செல்வன் பரமானந்தன் (35 வயது - மட்டக்களப்பு), கணேசலிங்கம் சிவா (28 வயது மூதூர்), கிருபா (32 வயது - கதிரவெளி) ஆகியோரே படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டவர்களாவர்.

[4ம் பக்கம் பார்க்க]

## விடுதலைப்புலிகள் மீது தடை;
## இலங்கை நிராகரிக்கும்

(கொழும்பு)
இலங்கையிலும் விடுதலைப் புலிகளைத் தடைசெய்யவேண்டும் என்ற கோரிக்கையை, இலங்கை அரசு நிராகரிக்கலாம் எனக் கொழும்புச் செய்திகள் தெரிவித்துள்ளன.
இவ்வாறான ஒரு தடையை ஜனாதிபதியோ அரசாங்கமோ விரும்பவில்லை எனவும் கூறப்படுகிறது. எனினும் புலிகளைத் தடைசெய்யுமாறு சில எதிர்க் கட்சிகள் வற்புறுத்தக்கூடும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(4ம் பக்கம் பார்க்க)

### தமிழ்ப் போராளிகளுக்கு முகாம்;
## இந்தியா ஒப்புக்கொண்டது

(புதுடில்லி)
இந்தியாவில், இலங்கைத் தமிழ் தீவிரவாதிகட்கு ஆயுத பயிற்சி முகாம்கள் இருந்ததை இந்தியா முதல் தடவையாக ஒப்புக்கொண்டுள்ளதாக 'இந்தியா ருடே' சஞ்சிகை தெரிவித்துள்ளது.
'இந்தியா ருடே' மேலும் தெரிவிக்கையில்;
ராஜீவ் காந்தியின் கொலையில் சந்தேகிக்கப்படும் ஒற்றைகண் சிவராசன் இந்திய புலனாய்வு ஏஜென்சியால் ஆயுதபயிற்சி அளிக்கப்பட்டவர்
1983 ஆம் ஆண்டாளவில் இலங்கை இனப்பிரச்னையில்

(4ம் பக்கம் பார்க்க)

### வீரச்சாவு

[யாழ்ப்பாணம்]
வீரவேங்கை ரவிச்சந்திரன் (நார்மரட்ணம் ராஜ்குமார் செங்கலடி). மற்றும் மேஜர் இளங்கோ அல்லது விமல்ராஜ் (குழந்தைவடிவேல் ஜெகதீஸ்வரன் கொக்கிளாய் கருநாட்டங்கேணி] ஆகி

[4ம் பக்கம் பார்க்க]

## வடக்கு-கிழக்கு நிலை குறித்து
## அவசர மாநாடு கூடுகிறது

(கொழும்பு]
வடக்கு -கிழக்கு மாகாணங்களின் தற்போதைய நிலைமை பற்றி ஆராய்வதற்காக அமைச்சரவை உயர் மட்டக் குழுவொன்று இம் மாதம் 26-ம் திகதி கொழும்பில் கூடவுள்ளது.
ஜனாதிபதி ஆர் பிரேமதாசாவின் சர்வதேச விவகாரங்களுக்கான ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் வடக்கு கிழக்கு மாகாணங்களின் அரச அதிபர்களையும் கலந்து கொள்ளும்படி அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.
மேற்படி கூட்டம் கொழும்பில் நடைபெறுவதற்கு முன் இக்கூட்டத்தில் கலந்து கொள்ள இருக்கும் அமைச்சர்களும் அரச அதிபர்களும்

(4ம் பக்கம் பார்க்க)

### அமைச்சர் வீரப்பன்
## பதவி நீக்கம்

(சென்னை)
தமிழ்நாடு அமைச்சரவையிலிருந்து பிற்பட்டோர் நலத்துறைஅமைச்சர் திரு. இராம. வீரப்பனை முதல்வர் ஜெயலலிதா நீக்கியுள்ளார்.
நேற்று சென்னையில் ஆளுநர் மாளிகையிலிருந்து வெளியான செய்திக் குறிப்பு ஒன்

[4ம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்

### தேவை

1500 சக்தியுள்ள ஜெனறேற்றர் தினமும் இரவில் 10-00 மணித்தியாலங்கள் வேலை செய்வதற்குத தேவை. விண்ணப்பிக்கவும்: விளம்பர இல: சி 2152, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். (சி 2152)

### ஆங்கில இலக்கியம்

யாழ். பல்கலைக்கழக G A Q. இலக்கிய நூல்கள்; Animal Farm, Withering Heights, Heart of Darkness சில பிரதிகளே விற்பனைக்கு உண்டு. வேறும் பல இலக்கிய நூல்களும் உண்டு. பூபால சிங்கம் புத்தகநிலையம், யாழ்ப்பாணம். (எ-2138)

### வைத்திய சேவை

ஊர்காவற்றுறை மாவட்ட வைத்தியசாலை முன்னுள் வைத்தியர் Dr. S. பாலச்சந்திரன் தனது சேவையை யாழ் வேம்படி மகளிர் கல்லூரிக்கு முன்பாக ஆரம்பித்துள்ளார், நேரம் பகல் 12 மணி - பி.ப. 2 மணி வரையும் பி. ப. 4 மணி - பி. ப. 6 மணி வரையும். கிளை: பிளாக் ரோட், சங்கானை நேரம் மாலை 7 மணி காலை 7 மணி வரையும். (சி 6318)

### WANTED

A Tutor for Computer Program's. Apply in detail to North Ceylon Technical Institute, 14, St. Peter's Lane, Hospital Road, Jaffna. (A-2158)

### விண்ணப்பப் படிவம்

பட்டதாரி பயிலுனர்களுக்கு நிரந்தர நியமனம் பெறுவதற்கான பரீட்சைப் படிவம் விற்பனையாகிறது. விபரம் எம்மிடம் எந்நேரமும் பார்வையிடலாம். நாயகபாலன் புத்தக களஞ்சியம், மானிப்பாய். (சி-6329)

# வீரச்சாவின் மூலம் போராட்டம் வளர்ச்சி பெறும்

[நாவற்குழி]

வீரச்சாவின்மூலம் எமது போராட்டம் மேலும் மேலும் வளர்ச்சியடையுமே தவிர ஒழிந்துவிடாது.

இவ்வாறு சாவகச்சேரி பிரதேசப் பொறுப்பாளர் திரு. ம. வெற்றிச்செல்வன், வீர வேங்கை குட்டி அருளின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டத்தில் பேசும் போது கூறினர்.

நாவற்குழி தெற்கு கலைவாணி சனசமூக நிலைய முன்றலில் ஆசிரியர் திரு. க. சந்திரசேகரம் தலைமையில் நடைபெற்ற இவ் அஞ்சலிக் கூட்டத்தில் மகளிர் முன்னணி உறுப்பினர் செல்வி இளநிலா, ஆசிரியர் திரு. ச. மார்க்கண்டு, தென்மராட்சி உதவி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. கோபால், தென்மராட்சி மாணவர் அமைப்பு பொறுப்பாளர் திரு புரட்சி ஆகியோர் உரையாற்றினுர்கள்.

அஞ்சலிக்கூட்ட முடிவில் தென்மராட்சி கலை பண்பாட்டுக் கழகத்தின் ஆதரவில் பெரியமாவடி சித்திவிநாயகன் கலைமன்றம் வழங்கிய ''உரிமைத்தேர்'' என்னும் குறியீட்டு நாடகமும் இடம் பெற்றது. (107)

## கூட்டுறவுபணியாளர்பரீட்சை; 20 பேர் சித்தி

[யாழ்ப்பாணம்]

வடக்கு-கிழக்கு மாகாண சபை நடாத்திய கூட்டுறவு பணியாளர் தராதரப்பத்திரப் பரீட்சையில் [சாதாரணம்] 20 பேர் சித்தியடைந்துள்ளனர்.

சித்தியடைந்தோர் விபரம் வருமாறு:

யோ. லூ. அஞ்சலீனு, சோ. அமலராணி, சு. அருட்செல்வம், பொ. அற்புதரூபன், ம. இளங்கோ, க. கிருஷ்ணகுமார், த. சற்குணராஜா, செ. சிவராசா த. செல்வஜோதி, தி. சூரியகாந்தன், க. தவனேசமலா, சி. கிருப்புவனி, சோ. திருவருட்செல்வன், ந. மகேஸ்வரி, மு. மொறிஸ் முத்துக்குமாரு, இ. ஜெயக்குமார், ப. வனிதா, ச. வளர்மதி, ப. ரஜனிதேவி, ஜோசப், பொன் விகடர் சிங்கராசா. [சு]

## மாவீரர் நினைவுவிழா

(ஆனைப்பந்தி)

வீரச்சாவைத் தழுவிக்கொண்ட தீவகப்பகுதி வேங்கைகளை நினைவுகூர்ந்து மாதந்தோறும் 'மாவீரர் நினைவு விழா' நடாத்தவுள்ளது.

இதன் முதற்கட்டமாக ஏப்ரல் மாதத்தில் வீரச்சாவடைந்த மாவீரரை நினைவுகூரும் இம்மாத இறுதியில் மேற்படி விழா தீவக மக்கள் தங்கியிருக்கும் கெற்பலிப் பகுதி பண்டிதர் குடியிருப்பில் நடைபெறவுள்ளது. (101)

## சிரமதானப் பணி

[வட்டுக்கோட்டை]

வட்டுக்கோட்டை ராஜன் கதிர்காமர் விளையாட்டுக்கழகத்தினர் வட்டுக்கோட்டை கொத்தணிப் பிரிவுக்குட்பட்ட பாடசாலைகள், பொது ஸ்தாபனங்கள், கோவில்களில் சிரமதானப் பணிகளைச் செய்வதற்கு திட்டமிட்டுள்ளனர்.

## சாவகச்சேரி வைத்தியசாலை சத்திர சிகிச்சை நிலைய வேலைகள் பூர்த்தி

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி வைத்தியசாலையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சத்திரசிகிச்சை நிலையம் தற்போது பூர்த்தியடைந்துள்ளது.

பல லட்சம் ரூபா செலவில் கட்டிட நிர்மாணத் திணைக்களத்தின் மேற்பார்வையில் நிர்மாணிக்கப்பட்ட மேற்படி சத்திரசிகிச்சை நிலையத்துக்கு வேண்டிய உபகரணங்களை கொழும்பிலிருந்து பெறுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், மேற்படி சத்திரசிகிச்சை நிலையம் சகல நவீன வசதிகளைக் கொண்டதாக இருக்குமென்றும் கூறப்படுகின்றது. [வி]

## அறிவித்தல்

இறைச்சிக்கடை உரிமையாளர்களுக்கு இடைஞ்சலாக இருக்கும் சட்ட விரோத இறைச்சி வியாபாரிகளை கட்டுப்படுத்தும் வகையிலும் கொல்களப் பரிசோதனை சம்பந்தமாக இருக்கும் நிலைப்பாடுகளை பரிசீலனை செய்வதற்கு தங்களின் ஆலோசனை வேண்டியிருப்பதனுல் இக்கூட்டத்திற்கு தவருது சமூகம் தரும்படி வேண்டப்படுகின்றீர்கள்.

**தலைமை: உபதலைவர் திரு. கந்தையா தங்கராசா அவர்கள்**

இடம்- மரியதாஸ் படிப்பகம்
உதய சூரியன் வீதி, கச்சாய் றேட்
சாவகச்சேரி.

காலம்: 22 - 05 - 92 வெள்ளிக்கிழமை, மு.ப.10மணி

(1) பிரதம விருந்தினராக பல பிரமுகர்கள் பங்குபற்றுவார்கள்
(2) யாழ். மாவட்ட இறைச்சிக்கடை சமாசம் பங்குபற்றும்.

அத்தோடு பல பிரமுகர்கள் பங்குபற்றுவார்கள். தவருது சமூகம் தரவும்

**அற்புதராஜா [பபி]**
செயலாளர்
நெல்லியடி.

(எ-2116)

## ஏற்று நீர்ப்பாசனம்

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி மாவட்டத்தில் கிருஷ்ணபுரம் கிராமிய உற்பத்திக்குழுப் பிரிவில் ஏற்று நீர்ப்பாசனம் தமிழீழ ஆய்வு நிறுவனத்தால் அமைக்கப்பட்டுள்ளது.

இங்கு பழக்கப்பட்ட மாடுகளைக்கொண்டு ஏற்று நீர்ப்பாசனம் மேற்கொள்ளப்படுகிறது.

எரிபொருள் தட்டுப்பாடு, எரிபொருள் விலையேற்றம் போன்ற காரணங்களால் ஏற்படும் பாதிப்புகளைத் தவிர்ப்பதுடன், குறைந்த உற்பத்திச் செலவில் விவசாய உற்பத்திகளை மேற்கொள்வதற்கும் இவ் ஏற்று நீர்ப்பாசன முறை உதவும் என்பது குறிப்பிடத்தக்கது.

## மழை தொடரும்

(கொழும்பு)

கடந்த ஞாயிறுக்கிழமையிலிருந்து தென்பகுதியில் குறிப்பாக கொழும்பில் பெய்துவரும் கடும் மழை இன்னும தொடருமென வானிலை அவதான நிலையம் அறிவித்துள்ளது. (கே)

## மருந்தாளர் சங்கம்

(ஓட்டுமடம்)

யாழ். மாவட்டத்திலுள்ள பிரதேசசபையின் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் அனைத்து சித்த ஆயுர்வேத வைத்திய சாலைகளில் கடமையாற்றி வரும் மருந்தாளர்கள் ஒன்றிணைந்து மருந்தாளர் சங்கமொன்றினை அமைத்துள்ளனர். (75)

## இன்று

(யாழ்ப்பாணம்)

வண்ணை சிவன்கோவிலில் நடைபெற்றுவரும் இலட்சார்ச்சனையில் இன்று மாலை 6 மணிக்கு யாழ்.இந்துக் கல்லூரி ஆசிரியர் திரு. சிவகுமாரன் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்.

## தொடர்ச்சியாக மழை

[கிளிநொச்சி]

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த சில வாரங்களாக கடும் மழை பெய்தவண்ணம் இருப்பதுடன் இரணைமடுக் குளம் தவிர்ந்த ஏனைய குளங்களில் சிறுபோக நெற்செய்கையும் உப உணவுச் செய்கையும் ஆரம்பமாகியுள்ளது.

புதுமுறிப்புக்குளம், நந்தன் குளம் ஆகியவற்றின் நீர்மட்டமும் உயர்ந்துள்ளது. [83]

## வரையறுக்கப்பட்ட கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கம், மூளாய்.

பதிவு இல. 83/4-04-1936

# வருடாந்தப் பொதுக் கூட்டம்

மேற்படி கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் 1992ம் ஆண்டு ஆனி மாதம் 14ம் திகதி ஞாயிற்றுக்கிழமை (14-06-92) காலை 9 30 மணிக்கு மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை விரிவுரை மண்டபத்தில் நடைபெறும் அங்கத்தவர்களை அனைவரையும் சமுகம் தருமாறு வேண்டுகின்றோம். 31-5-92க்கு முன் காரியாலயத்தில் கிடைக்கும் பிரேரணைகள் பரிசீலிக்கப்பட்டு பொதுக்கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படும்.

### நிகழ்ச்சி நிரல்

1. இறை வணக்கம்
2. கூட்ட அறிவித்தல் வாசித்தல்
3. தலைவர் உரை
4. சென்ற வருடாந்த பொதுக்கூட்ட அறிக்கை
5. எண்பார்வை அறிக்கை (1990 - 1991)
6. மொத்தக்கடன் எல்லை ரூபா 500000/-
7. தேநீர்ச்சாலை [அங்கீகாரம்
8. பிரேரணைகள்
9. புதிய அங்கத்தவர் அங்கீகாரம்
10. பணிப்பாளர்சபை வெற்றிடங்கள் தெரிவு:- சித்தங்கேணி - 1, சுழிபுரம் - 1, சங்கானை கிழக்கு மாதகல்-2, தொல்புரம்-1, மூளாய்-1
11. இறை வணக்கம்

குறிப்பு: எண் பார்வை அறிக்கை (1990 - 1991) காரியாலயத்தில் பார்வையிடலாம்.

நா. வேலுப்பிள்ளை
செயலாளர்
18-05-1992.

(எ-2159)

## நிருபர்கள் தேவை

ஈழநாடு பத்திரிகையில் கடமையாற்ற கீழ்க் காணும் இடங்களுக்கு நிருபர்கள் தேவை.

| | |
|---|---|
| ★ நல்லூர் | ★ கோப்பாய் |
| ★ உரும்பிராய் | ★ கொடிகாமம் |
| ★ நீர்வேலி | ★ கைதடி |
| ★ நெல்லியடி | ★ மீசாலை |
| ★ சுன்னுகம் | ★ கோண்டாவில் |

★ விண்ணப்பதாரர் க. பொ. த. (சா) பரீட்சையில் தமிழ் உட்பட 6 பாடங்களில் சித்திபெற்றிருக்கவேண்டும்.

★ ஆங்கில அறிவு அவசியம்.

★ வதிவிட அத்தாட்சிக்காக கிராமசேவையாளர் நற்சாட்சிப்பத்திரம் உட்பட இரு நற்சாட்சிப்பத்திர பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டும்.

★ விண்ணப்பங்களை சொந்தக் கையெழுத்தில் 15-06-92க்கு முன்னர் நிர்வாகி, ஈழநாடு, த. பெ. இல. 49, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு தபாலில் அனுப்பிவைக்கவேண்டும். காரியாலய நேரத்தில் நேரிலும் சமர்ப்பிக்கலாம்.

**நிர்வாகி**

(ஏ-2156)

## பனைவெல்லம் விலைகுறைப்பு

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு தெங்குபனம் பொருள உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கத்தில் மொத்த விலையாக கிலோ 62 ரூபாவாக விற்கப்பட்ட பனை வெல்லம் தற்போது கிலோ 38 ரூபாவாகவும், சில்லறை விலையாக கிலோ 66 ரூபாவாக விற்கப்பட்டது தற்போது கிலோ 40 ரூபாவாகவும் குறைக்கப்பட்டுள்ளது. (72)

## புனருத்தாரண நடவடிக்கை

[மட்டக்களப்பு]

கல்குடா, ஒட்டமாவடி கருவன்கேணி ஆகிய இடங்களிலுள்ள மீனவர்கள் கூட்டுறவுச் சங்களின் புனருத்தாரண நடவடிக்கைகளுக்கெனத் தலா இருபத்தையாயிரம் ரூபா அண்மையில் வழங்கப்பட்டுள்ளது.

இந்நிதி உதவி பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியில் இருந்து வழங்கப்பட்டுள்ளது எனத்தெரிவிக்கப்பட்டது. (154)

# வீடு, வாகனம் வாங்க அரசாங்க ஊழியர்க்கு 60 மாத சம்பள முற்பணம்

## - அரசு தீர்மானம் -

[கொழும்பு]

அரசாங்க ஊழியர்களுக்கு 60 மாத [5 வரு—] சம்பள முற்பணம் வழங்க அரசு இணங்கியுள்ளது.

அரசாங்க சேவையிலுள்ள ஆண், பெண் ஊழியர்கள் வீடுகளையோ அல்லது வாகனங்களையோ வாங்க 60 மாத முற்பணத்தை வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளதாக பிரதமர் திரு. டி. பி. விஜயதுங்கா தெரிவித்துள்ளார்.

முன்பு இதுபோன்ற சேவைகளுக்காக 24 மாத சம்பள முற்பணம் வழங்கப்பட்டு வந்தது. தற்போதையநிலையை கருத்தில்கொண்டு இது 60 மாதமாக அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் பிரதமர் திரு. விஜயதுங்கா தெரிவித்துள்ளார். (சி)

# நியாய விலையில் நெல் கொள்வனவு செய்ய நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

கிளிநொசசி மாவட்டத்தில் தமிழீழ ஆய்வு நிறுவனத்தினல் ஒழுங்கு செய்யப்பட்ட ஆய்வு வட்டகருத்தரங்கின் மாதாந்த அமர்வில் "நெல் உற்பத்தியில் இயற்கை சமநிலையை ஏற்படுத்தல்" என்னும் தலைப்பில் ஆய்வுமேற்கொளளப்பட்டது.

இவ் அமர்வில் பெரும்போக நெற்செய்கையில் பொருளாதாரத்தடை காரணமாக ஏற்பட்ட உற்பத்திச் செலவு அதிகரிப்பு, விளைச்சல் குறைவு ஆகிய பிரச்னைகளுடன் தற்போது ஒரு மூடை நெல் 525/- ரூபாவாக சரிவடைந்துள்ளதும் இதுவிவசாயிகளைப பாதித்திருப்பதும் குறித்து ஆராயப்பட்டது.

இதன்மூலம் எதிர்வரும் மாதம் முதல் நிர்ணயித்த விலைப்படி பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் நெல் கொள்வனவில் ஈடுபட கச்சேரி மறறும் இதர நிறுவனங்களுடன் தொடர்புகொண்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

# ஆசிரியர் பற்றுக்குறையால் கல்வியில் பாதிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் ஆசிரியர் பற்றுக்குறையால கல்வியில் பெருமபாதிப்பு ஏற்பட்டுள்ளதாக கிளிநொச்சியில கூடிய மாவட்ட பாடசாலைகளின் பெற்றோர் - ஆசிரியர் சங்கங்களின் இணைப்புப் பொதுக்கூட்டத்தில் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்கில் திரு. குணரெத்தினம் தலைமையில் இக்கூட்டம் இடம்பெற்றது.

திருவாளர்கள் பரமநாதபிள்ளை, விநாயகமூர்த்தி, வைத்தீஸ்வரமூர்த்தி, ஜெயபாலன், சீவரெத்தினம், பிரசாத், டாக்டர் திருலோகமூர்த்தி ஆகியோரும் உரையாறறினர்கள்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கங்களின் கூட்டமைப்பு மற்றும் கல்வி நிதியம் ஆரம்பிப்பதெனவும் முடிவுசெய்யப்பட்டது. (83)

## கல்வி நிதியத்திற்கு

# பெற்றோர் நலன்விரும்பிகள் உதவ முன்வரவேண்டும்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் ஆசிரியர் பற்றுக்குறை மற்றும் பல குறைபாடுகளால் கல்வி நிலையில் பெரும் வீழ்ச்சி நிலை ஏற்பட்டுள்ளது. இதற்கு முடிவு காணப்பட வேண்டுமானல் பெற்றோர், நலன வரும்பிகள் கிளிநெச்சி கல்வி நிதியத்திற்கு உதவ முன்வரவேண்டும.

இவ்வாறு கிளிநொச்சி கனிஷ்ட மகாவித்தியாலயத்தில் இடம்பெற்ற கல்வி அபிவிருத்தி சம்பந்தமான கூட்டத்தில் உரையாற்றுகையில் கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு. பொன்னம்பலம் கூறினர்.

வர்த்தகர் சங்கத் தலைவர் திரு. இ. சரவணபவானந்தன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் கோததணி அதிபர் திரு. என. சோதிநாதன், மேலதிக அரசாங்க அதிபர் திரு. எஸ். அமிர்தலிங்கம், கலாநிதி எம். சிவகடாட்சம் ஆகியோரும் உரையாற்றினர்கள். (83)

## வவுனியா மாவட்ட

# உற்பத்தி எழுச்சிவாரம் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

தொழிலாளர் தினத்தை முன்னிட்டு உற்பத்தி எழுச்சி வாரத்தில் தமிழீழ ஆய்வு நிறுவனத்தினல் வவுனியா மாவட்டத்தில் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றிபெற்றோர் விபரங்கள் வெளியாகியுள்ளன.

வவுனியா மாவட்டம்: கைக்கொடியில் மாடு கொண்டோடுதல்—1. சு. சிவநாதன், புளியங்குளம், 2. வே. ஜெகதீஸ்வரன், காக்கையன்குளம், 3. ஜெ. பெனடிக், சேமமடு.

கிடுகு பின்னல் போட்டி: 1. ப. உமாதேவி, மருதங்குளம், 2. மு பார்வதி, பன்றிக்கெய்தகுளம்.

தையல்போட்டி: 1. ஞா. உஷாந்தினி, காக்கையன்குளம், 2. இ பரமேஸ்வரி, புளியங்குளம், 3 கு. சுகந்தினி, காக்கையன்குளம்.

விவசாய அறிவுப்போட்டி: 1. க. ஜெயந்திரன், 2. தி. சியானி, காக்கையன்குளம், 3. பொ. ஆனந்தநடராசா, கனகராயன்குளம்.

மரம் ஏறும்போட்டி: 1. க. ஜெனோராற், சேமமடு, 2. சி. ஆனந்தன், புளியங்குளம், 3. சு. சிவநாதன், புளியங்குளம்.

மாணவர்களுக்கான கட்டுரைப்போட்டி; 1. சி. சிவரஜனி, 12ம் ஆண்டு, ஓமந்தை மகாவித்தியாலயம், 2. சி. விக்னேஸ்வரி 13ம் ஆண்டு, பூவரசங்குளம் மகாவித்தியாலயம், 3. மு விஜயராணி, 12ம் ஆண்டு, பூவரசங்குளம் மகாவித்தியாலயம்.

சிறந்த உற்பத்திக் குழுக்கான பரிசு; சேமமடு உறபத்திக்குழு.

# உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி

[வட்டுக்கோட்டை]

அராலி கிழக்கு அண்ணா விளையாட்டுக்கழகம் தனது 12வது ஆண்டு நிறைவையொட்டி யாழ் மாவட்ட ரீதியில் 7பேர்கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி ஒன்றினை நடாத்தவுள்ளது. [139]

# நள்ளிரவில் திருட்டு

(நாவற்குழி)

யாழ். நகரிலுள்ள வெலிங்டன் சந்திக்கருமையிலுள்ள கடையில் நேற்றுமுன்தினம் நள்ளிரவு ஓடு பிரித்து இறங்கிய திருடர்கள் அங்கிருந்த சில இயந்திர சாதனங்களையும் பணத்தையும் திருடிச் சென்றுள்ளனர். (107)

# புறக்கோட்டையில் தமிழர் கைது

(கொழும்பு)

புறக்கோட்டையில் தமிழர் ஒருவர் பொலிசாரால் கைது செய்யப்பட்டு வசாரிககபபட்டு வருகிறார்.

யாழ் - நல்லூர் வாசியான இவருககும் புலிகளுக்கும் தொடர்பு இருக்குமா என விசாரணை மேறகொள்ளப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டது. (கே)

# உதைபந்தாட்ட போட்டி

(யாழ்ப்பாணம்)

'திருமலை நட்சத்திரங்கள்' நடாத்தும் 7 பேர்கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் 2ம் சுற்றின் இன்றைய ஆட்டம்:

யாழ். பல்கலைக்கழகம் [பி] அணி எதிர் கொக்குவில் பொற்பதி, அராலி அண்ணா எதிர் ஜெற்லைன்ஸ் இப்போட்டிகள் யாழ். தொழில் நுட்பக கல்லூரியில் நடைபெறும்.

# இராசிபலன்

**21 - 05 - 1992**

**வியாழக்கிழமை**

**(தமிழுக்கு வைகாசி - 08)**

பஞ்சமி பி. இ. 3-10 வரை, சித்தயோகம், பூராடம் காலை 6-01 வரை, இராகு காலம் பகல் 1-22 முதல் 2-52 வரை, சுபநேரம் காலை 7-22 முதல் 8-52 வரை.

மேடம்: தொழில் நஷ்டம், குடும்ப பகை, அமைதிக குறைவு.

இடபம்: வீண்வம்பு, பெண் தொல்லை, அலைச்சல்.

மிதுனம: குடும்ப மகிழ்ச்சி, பணவரவு, தொழில் லாபம்.

கடகம்: சுபகாரியம், வேலைப் பழு, ஆராய்ச்சி.

சிங்கம்: மனக்குமுறல், காரியதடை, விதண்டாவாதம்.

கன்னி: நோய் உபாதை, தொழில் கஷ்டம், வேதனை.

துலாம்: காரியசித்தி, இனசன உதவி, பயணம்.

விருச்சிகம்: கடன் உபாதை, பொல்லாப்பு, புத்திரர் துன்பம்.

தனுசு: கௌரவம், நண்பர் உதவி, குடும்ப சுகம்.

மகரம்: வேண்டாத உறவு, வயிற்றுவலி, யோசனை.

கும்பம்: தாய்வழி நன்மை, தொழில்லாபம், தெய்வீகச் செலவு.

மீனம்: அதிக பிரயாசம், தொழில்மாற்றம், பொதுப் பணி.

—ஜோஸ்யர்

# செய்திச் சரம்

(சென்னை)

தமிழ்நாடு முதலவர் ஜெயலலிதாவின் உருவத்தை பச்சை குத்திக்கொள்ளும் இயக்கத்தை மந்திரி மதிசூதனன் ஆரம்பித்து வைத்துள்ளார். சுமார் 500 பேருடன் மந்திரி மதிசூதனனும் பச்சை குத்திக் கொண்டார். அமைச்சர் அழகு திருநாவுக்கரசுவும் பச்சை குத்திக் கொண்டார். ஜெயலலிதா உருவத்தை பச்சை குத்திக கொண்டவர்களுக்கேமுன்னுரிமையளிக்கப்படும என்று கூறப்படுகிறது.

### ஜானகி அணியினர்

முன்னுள் ஜானகி அணியினர் சாதாரண கட்சித்தொண்டர்களாககப்படவிருககிறார்கள். இதற்கான முதல் அறிகுறியாக ஆர். எம். வீரப்பனிடமிருந்து பிற்பட்டோர் நலத்துறை இலாகா பறிக்கப்படுமென கூறப்படுகிறது. இப்போது ஆர். எம். வீ தனிமரமாகிவிட்டார். அவர் வெளியேறுவதென்றல் அவருடன் சேர்ந்து வெளியேற எம். எல். ஏக்கள் எவரும் இல்லையாம்.

### புதிய தகவல்

மகாமகத் திருவிழாவில் முதல்வர் நீராடிய பின்னர் அருகிலுள்ள பெண்கள் கல்லூரி விடுதிக்குச் சென்றார். அங்கு மாபெரும் விருந்து அளிக்கப்பட்டது. 18 வகை கறிகளுடன்சாப்பாடு. அமைச்சர்கள் உட்பட 300 விருந்தினர் இதில் கலந்துகொண்டனர். மகாமகக் குளத்தருகே நடந்துமுடிந்த அந்த துயர சம்பவத்தில் பலர் பலியானது பற்றி முதல்வருக்கு உடன் தெரிவிக்கப்படவில்லை. அவர் சென்னை சென்ற பிறகே அந்தச்சம்பவம்பற்றி தெரிவிக்கப்பட்டதாக இப்போ புதிய தகவல் கிடைத்துள்ளது.

### போதைப்பொருள் வழக்கு

கடந்த 3 ஆண்டுகளில் தமிழக பொலிஸார் பதிவுசெய்துள்ள போதைப்பொருள் வழக்கு தொகை வருமாறு; 1989 ல் 1642 வழக்குகள் பதிவாகின 1990 ல் 2357 வழக்குகள் பதிவாகின. தமிழகஅரசு மதுவிலககை நடைமுறைப் படுத்திய 1991 ம் ஆண்டு இந்த வழக்குகளின் தொகை 5207 ஆக அதிகரித்துள்ளது. இவ்வருடம் ஜனவரியில் மட்டும் 571 போதைப்பொருள் வழக்குகள் பதிவாகியுள்ளன. இந்தப் போதைப் பொருள் வழக்குகளில் பெரும்பாலானவை கஞ்சா வழக்குகளாகும்.

### விலைவாசி உயர்வு

தமிழகத்தில் பங்கீட்டு அரிசிவிலையையும் பால்விலையையும், பஸ் கட்டணத்தையும் மின்சார கட்டணத்தையும் அரசு உயர்த்தியிருக்கிறது. விலைகளை மத்திய அரசு [இ. காங்கிரஸ்] உயர்த்தியதால் தமிழ்நாட்டிலும் விலை உயர்த்தப்பட்டதாக தெரிவிக்கப் படுகிறது. இதே சமயம் தேர்தல் காலங்களில் காங்கிரஸ், அ. தி. மு. க. அளித்த வாக்குறுதிகள் சில பத்திரிகைகள் வெளியிட்டுள்ளன. ஆட்சிக்கு வந்த 100 நாட்களில் அத்தியாவசிய பொருட்களின்விலை உயராமல் தடுத்து நிறுத்துவோம் என்று இ. காங்கிரஸ் தேர்தலின்போது உறுதியளித்திருந்தது. விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த உடனடி கவனம் செலுத்தப்படும் என்று அ. தி. மு. க. உறுதியளித்திருந்தது.

### ரயில் கட்டண உயர்வு

ரயில் கட்டண அதிகரிப்பு சென்னையில் வெளியானதும் ரயில் பயணிகள் மத்தியல் ஒருவித பதற்றம் ஏற்பட்டது. இந்தக் கட்டண உயர்வை சமாளிக்க முடியுமா? என்ற திகைப்பை, மக்களிடையே பரவலாக காணமுடிந்தது. சென்னை மீனம்பாக்கம் பகுதியில் ஆத்திரமடைந்த பயணிகள் எந்த அரசியல் தூண்டுதலுமின்றி மறியல் செய்தனர். தாங்களாகவே மறியலில் ஈடுபட்டார்கள்.

### வரிவசூல் நடைபெறவில்லை

தமிழ்நாடு அரசின் திறமையின்மையால் சுமார் 500கோடி ரூபா வரவேண்டிய வரி வசூலிக்கப்படவில்லையென்றும், சில முறைகேடுகளினல் சுமார 20 கோடி ரூபா வரி நஷ்டமேற்பட்டுள்ளதாகவும் ஓடிட்டர் ஜெனரல் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### தீர்ப்பு தவறானது

சென்னை உயர் நீதிமன்றத்தில் தலைமை நீதிபதி உட்பட 3 நீதிபதிகள் அளித்த தீர்ப்பை தவறானது என்று ஒரு தனி நீதிபதி தீர்ப்பளித்துள்ளார்.

கூட்டுறவுஊழியர்கள், உயர் நீதிமன்றத்தில் நியாயம்கோரி ரிட்மனு தாக்கல் செய்திருந்தனர். 1989 ல்3 நீதிபதிகள்குழு இதனை விசாரணை செய்தது. இந்த ரிட் மனு தொடர்பாக உத்தரவிட உயர்நீதிமன்றத்திற்கு அதிகாரம் இல்லைஎன்று ஒரு தனி நீதிபதி தீர்ப்பளித்தார். மற்றொரு வழக்கில் இந்த 3 நீதிபதிகளின் தீர்ப்புக்கு எதிராக நீதிபதி மிஸ்ரா என்பவர் தீர்ப்பு வழங்கியுள்ளார். சென்னை உயர்நீதிமன்றத்தில் கடந்த நூறு ஆண்டுகால வரலாற்றில் இதுவரை நடந்திராத சம்பவம் இது என்று நீதிமன்ற வட்டாரங்கள் தெரிவித்தன.

# இலவச பாடநூல்கள் வழங்கப்படவில்லை

(மட்டக்களப்பு)

வாழைச்சேனைப் பகுதியில் உள்ள கதிரவெளி விக்கினேஸ்வரா வித்தியாலயத்தில் ஆசிரியர்கள் பற்றுக்குறை உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

867 மாணவர்கள் இப்பாடசாலையில் கல்விகற்கின்ற போதிலும் சுமார் 300க்கும் மேற்பட்ட மாணவர்கள் தரையில் அமர்ந்து கல்வி கற்கின்றனர்.

இவர்களுக்கு இன்று வரை இலவசப்பாடப் புத்தங்கங்களும் வழங்கப்படவில்லை என்று அப்பாடசாலை ஆசிரியர் ஒருவர் தெரிவித்துள்ளார். (154)

# கனடா அரசு உதவி கோருகிறது

(ஒட்டாவா)

கனடாவுக்கு கள்ளத்தனமாக ஆட்களைக் கொண்டு வரும் கடத்தல் கோஷ்டி ஒன்றின் தலைவரை தேடிக் கண்டுபிடிக்க கனடாவினல் சர்வதேச உதவி நாடப்பட்டுள்ளது.

இந்தக்கோஷ்டிக்கு ரொரான்ரோவில் தலைமை நிலையம் இருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. (கே)

## ★ வற்றாப்பளைச் சம்பவம்:

# உடன் விசாரணை நடத்துக

# ஜனாதிபதிக்கு கோரிக்கை

## - இந்துசமயப் பேரவை விடுத்தது

(யாழ்ப்பாணம்)

வற்றாப்பளை கண்ணகை அம்மன் கோவில் மீது நடாத்தப்பட்ட ஷெல் தாக்குதல் குறித்து உடனடி விசாரணை நடத்துமாறு 'இந்து சமயப் பேரவை' ஜனாதிபதிக்கு அவசர கோரிக்கை விடுத்துள்ளது.

இதுகுறித்து வெளியிடப்பட்ட மகஜரில்;

வரலாற்றுப் பெருமைமிக்க முல்லைத்தீவு வற்றாப்பளை அம்மன் கோவிலில் வருடாந்தப் பொங்கல் உற்சவத்தில் கலந்துகொண்ட பக்தர்கள் மீது முல்லைத்தீவு இராணுவ முகாமிலிருந்து கடந்த திங்கட்கிழமை கண்மூடித்தனமாக நடாத்தப்பட்ட ஷெல்தாக்குதல் குறித்து 'இந்துசமயப் பேரவை' அதிர்ச்சியும் கவலையும் அடைந்துள்ளது இத்தாக்குதலினால் இறைவழிபாட்டில் ஈடுபட்டிருந்த பெண்களும் குழந்தைகளும் உட்பட 15 பேர் பலியானதும் ஏராளமானோர் காயமடைந்தமையும் ஒரு சோக நிகழ்ச்சியாகும்.

பௌத்தர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட இந்நாட்டு அரசாங்கமும் அரசபடைகளும் பிறமதத்தவர்களை இம்சிக்கும் வகையில் நடந்து கொண்டமை இது முதற்தடவையல்ல. வடக்கு கிழக்கு மாகாணத்தில் நிலவும் போர்க்காலச் சூழ்நிலையைச் சாட்டாக வைத்து இந்துக் கோவில்களை அழிப்பதும், இந்துக் கோவில்களில் உள்ள விக்கிரகங்களை அகற்றுவதும், இந்துக்களுக்கு வழிபாட்டுரிமையை மறுப்பதும் இந்துக் கோவில்களில் இராணுவ முகாம்கள் அமைப்பதும் சாதாரண நிகழ்வுகளாக அமைந்துள்ளன.

இந்துக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுவரும் இக்கொடுமைகள் குறித்து நாம் ஏற்கனவே ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளோம். பல்லின பல மதமக்கள் வாழும் இந்நாட்டில் எல்லா இனங்களுக்கும் அடிப்படை உரிமைகளும் மதசுதந்திரமும் பாதுகாப்பும் உண்டென்பதை நாம் தெளிவுபடுத்த விரும்புகின்றோம். தெய்வநிந்தனை செய்வோர் தெய்வத்தண்டனைக்கு உள்ளாவார்கள்.

இத்துர்ப்பாக்கிய சம்பவம் குறித்து உடனடியாக விசாரணை நடாத்துமாறும் தவறிழைத்தவர்களைத் தண்டிக்குமாறும் மேன்மை தங்கிய ஜனாதிபதியைக் கேட்டுக்கொள்கின்றோம் இந்துக்களைப் புண்படுத்தும் இத்தகைய நிகழ்வுகள் வருங்காலத்தில் நடைபெறாதிருக்க தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் கேட்டுக்கொள்கின்றோம்.

இச்சம்பவத்தில் அநியாயமாக உயிரிழந்த அப்பாவி மக்களுக்கு எமது அஞ்சலிகளைத் தெரிவிப்பதுடன் அவர்களின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு அவர்களை இழந்து வாடும் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

## வர்த்தக விடுமுறைகள்

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்டத்திலுள்ள வர்த்தக சங்கங்கள், வர்த்தக ஊழியர் சங்கங்கள் இணைந்து பின்வரும் தினங்களை வர்த்தக விடுமுறை நாட்களாகப் பிரகடனப்படுத்தியுள்ளனர்.

சனிக்கிழமை பிற்பகல் 2-00 மணியிலிருந்து அரை நாள் விடுமுறை நாளாகவும், ஞாயிற்றுக்கிழமை முழுநாள் விடுமுறை நாளாகவும் கருதி, நகரங்களிலும், பட்டினங்களிலும் உள்ள கடைகளை மூடுவதெனவும், கிராமங்களிலும், புற நகரப் பகுதிகளிலுமுள்ள சிறிய முதலீட்டுடனான வெற்றிலைக் கடைகள், பழக்கடைகள், மரக்கறிக் கடைகள் முதலியவற்றை அவ்வப் பிரதேச வர்த்தக சங்கங்கள் இனங்கண்டு சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் அவற்றைத் திறந்து வியாபாரம் செய்வதற்கான அனுமதியை வழங்குவதென்றும் முடிவுசெய்யப்பட்டது.

மேலும் பின்வரும் நாட்களை விடுமுறை நாட்களாகப் பிரகடனப்படுத்தி வர்த்தக நிலயங்களை மூடுவது எனவும் தீர்மானிக்கப்பட்டது. தைப் பொங்கல், மகாசிவராத்திரிக்கு அடுத்த நாள், அனைத்துலக மகளிர் தினம் மார்ச் 8ம் திகதி, சித்திரைப் புதுவருடம், பெரிய வெள்ளி, அன்னை பூபதி நினைவு நாள் - ஏப்பிரல் 19ம் திகதி, மே நாள், சித்திரை பௌர்ணமி, ஆடிப்பிறப்பு, கரும்புலிகள் தினம்-ஜூலை 5ம் திகதி ஆடி அமாவாசை, முத்தமிழ்விழா இறுதி நாள், நல்லூர்த்தேர் அல்லது அவ்வப் பிரதேச வணக்கத் தலங்களின் முக்கிய நாள், திலீபன் நினைவுநாள்- செப்டம்பர் 26ம் திகதி, புரட்டாதிச் சனி, குமரப்பா, புலேந்திரன் உட்பட பன்னிரு வேங்கைகள் நினைவுநாள்- ஒக்டோபர் 5ம் திகதி, தமிழீழ இந்தியப் போரின் ஆரம்ப நாள ஒக்டோபர் 10-ம் திகதி, தீபாவளி, சூரன் போர், மாவீரர் நாள்- நவம்பர் 27-ம் திகதி, நத்தார் பண்டிகை.

### விடுதலைப்புலிகள்

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

புலிகளைத் தடைசெய்தால், சமாதானத்திற்கான சந்தர்ப்பத்தை அரசு முற்றாக இழந்துவிடும் எனவும் அரசுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாம்.

### தமிழ் போராளிகளுக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியா கருணைகொண்டிருந்தபோது சிவராசன் ஆயுத பயிற்சி பெற்றார்.

குண்டு, வெடிமருந்து பற்றிய அறிவு புகட்டப்பட்டது. தொலைத்தொடர்பு பயிற்சிகளும் அளிக்கப்பட்டது. முன்னிலையில் நின்று யுத்தம் செய்யும் பயிற்சியும் தமிழ்நாடு முகாமொன்றில் அவருக்கு வழங்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளது

(கே)

### வடக்கு கிழக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இம்மாதம் 23-ம் திகதி சனிக்கிழமை அம்பாறை. மட்டக்களப்பு திருமலை ஆகிய இடங்களுக்கும் சென்று தற்போதைய நிலைமைகளை கண்டறியவும் உள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. [வி]

### அமைச்சர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

றில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டிருந்தது.

மலைவளத்துறை அமைச்சர் திரு. ஜெயக்குமாரிடம் திரு. வீரப்பன பொறுப்பிலிருந்த பிற்பட்டோர் நலத்துறை அமைச்சு கொடுக்கப்பட்டுள்ளது.

ஆளுநர் திரு. பீஷ்மர் நாராயண்சிங்குடன் முதலமைச்சர் நேற்றுக்காலை சுமார் அரைமணி நேரம் பேச்சுநடத்தியதாகவும், இந்தப் பேச்சுவார்த்தையின் போது மாநிலத்தின் இப்போதைய நிலைமை குறித்து எடுத்துக்கூறப்பட்டதாகவும் ஆளுநர் மாளிகை செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

திரு வீரப்பன் ஜெயலலிதா அமைச்சரவையிலிருந்துநீக்கப்படும் மூன்றாவது அமைச்சராவார். திரு ராஜாராம், ஜனாப் முகம்மது ஆசிப் ஆகியோர் ஏற்கனவே பதவி நீக்கம் செய்யப்பட்ட அமைச்சர்கள்.

எம்.ஜி.ஆர். அமைச்சரவையில் சக்திவாய்ந்த அமைச்சராக விளங்கிய திரு. வீரப்பன் அப்போதைய அ.இ.அ.தி.மு.க. ஜானகி அணியில் முக்கிய தலைவர்களில் ஒருவராக விளங்கியவர்.

### வீரச்சாவு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யோர் படையினருடனான மோதல்களில் வீரச்சாவை அடைந்துள்ளனர்.

வீரமரணமடைந்த போராளிகளுக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றனர்.

(க)

# முதியவர் கோரத்தாண்டவம்!

# 6 இளம் உயிர்கள் பலி!

## நியூசிலாந்தில் சம்பவம்

[ஆக்லன்ட்]

நியூசிலாந்தைச் சேர்ந்த 66 வயது முதியவர், தமது குடும்பத்தைச் சேர்ந்த 6 பேரைச் சுட்டுக் கொன்றதுடன், தன்னையும் தானே சுட்டுத் தற்கொலை செய்துகொண்டார்

தனது மனைவி மற்றும் ஒரு குழந்தை உட்பட 6 பேரை இவர் சுட்டுக் கொன்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று (செவ்வாய்) காலை நியூசிலாந்து ஆக்லன்டில் உள்ள தமது சொந்தப் பண்ணையில் குடும்பத்தவருடன் ஏற்பட்ட சூடான வாக்குவாதம் ஒன்றை அடுத்துக் கண்மூடித்தனமாக இவர் தமது குடும்பத்தவரைச் சுட்டுக் கொன்றதாக நியூசிலாந்துப் பொலிஸார் தெரிவித்தனர்.

பிரயன் ஷெலபர் என்ற பெயர் கொண்ட இந்த வயோதிபர், தமது குடும்பத்துடன் ஆக்லன்டில் உள்ள கூகிகூலி என்ற பகுதியில் மூன்று தலைமுறைகளாக வாழ்ந்தவர் எனக் கூறப்படுகிறது.

இவரது ஆவேசத் தாக்குதலில் இருந்து தப்பிய இவரது ஒன்பது வயதான பேரப்பிள்ளை ஒருவரே, அவசரப் பொலிஸாருக்கு டெலிபோன் செய்து நிலைமையை விளக்கி அவர்களை அங்கு அழைத்தாராம். வீட்டின் மாடி அறையில் ஒளிந்திருந்தபடியாலேயே தமது பாட்டனாரின் ஆவேசத் தாக்குதலில் இருந்து தான் தப்பியதாக அவர் பொலிஸாருக்குத் தெரிவித்துள்ளார்.

சூடான வாக்குவாதம் ஒன்றை அடுத்துத் தனது தாயாரும், சகோதரனும் தனது தாத்தாவால் சுட்டுக் கொல்லப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

துப்பாக்கியுடன் கோரத்தாண்டவம் ஆடிக்கொண்டிருந்த இந்தத் தாத்தாவைச் சரணடையுமாறு பொலிஸார் முதலில் வானொலி மூலம் கோரிக்கை விடுத்தனராம்.

இவரைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கு முகமூடி அணிந்த 20 பொலிஸார் உட்பட மொத்தம் 60 பொலிஸார் வானிலும். தரையிலும் பதிலடி நடவடிக்கையில் ஈடுபட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

### மூன்று தமிழர்கள்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

மற்றும் காத்தமுத்து முத்தையா, அவரது சகோதரர்களான சாளிராஜா, ராஜன் மற்றும் வேலுப்பிள்ளை, மயில்வாகனம் ஆகியோர் படையினரால் முகாம் கொண்டு செல்லப்பட்டுள்ளனர். (க)

### வற்றாப்பளை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கோவில் திருவிழாவுக்காக திரண்டிருந்த அப்பாவி மக்கள் மீது இராணுவம் மோட்டார் எனப்படும் சிறுபீரங்கி மூலம் தாக்குதல் நடத்தியதில் 23 பக்தர்கள் உயிரிழந்தனர். 35 பேர் படுகாயமடைந்தனர் என்று இச்சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் கூறுவதாக தெரிவிக்கப்படுகிறது. இத்தாக்குதல் நடத்தியமை ஒத்துக்கொண்டிருக்கும் இராணுவம், தாம் புலிகளை குறிவைத் நடத்திய இத்தாக்குதலில் உயிரிழந்தவர்கள் புலிப் போராளிகள் என்றும் இராணுவம் தனது தாக்குதலை நியாயப்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (மா)

### ராஜீவ்காந்தி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப்புலிகள் அமைப்பை சேர்ந்த இலங்கைத் தமிழர் என்றும் இருவர் இந்தியர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் விடுதலைப்புலிகள் தலைவர் பிரபாகரன், உளவுப் பிரிவுப் படைத்தலைவர் பொட்டு அம்மான் மற்றும் துணைத்தலைவர் அகிலா ஆகியோர் தலைமறைவுக் குற்றவாளிகள் எனவும் குற்றம் சாட்டப்பட்ட 26 பேர் நீதிமன்ற விசாரணைக்காக சிறைச்சாலைகளில் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [க]

### மேற்கு நாடுகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்தானிகர்களை சந்தித்து ஜனாதிபதி பிரேமதாசா பேச்சுவார்த்தை நடத்தியதாகவும் கூறப்படுகிறது,

மேற்குலக நாடுகள் இலங்கையில் நடைபெறும் மனித உரிமை மீறல்களை விமர்சித்து வருவதைத் தொடர்ந்து மேற்குலகநாடுகளின் உதவித் தொகைகள், நன்கொடைகள் ஆகியவை இலங்கைக்கு தொடர்ந்து கிடைப்பதில் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை உருவாகிவருவதைத் தொடர்ந்தே ஜனாதிபதி ஆசியான் நாடுகளைச் சேர்ந்த ஸ்தானிகர்களை சந்தித்து உதவிகோரியுள்ளதாகக் கூறப்படுகிறது.

மூன்றும் உலக நாடுகளுக்கு எதிராக மேற்குலகநாடுகள் மேற்கொள்ளும்அழுத்தங்களை ஆசியன் நாடுகள் கண்டிக்க வேண்டுமெனவும் ஜனாதிபதி பிரேமதாசா ஆசியன நாடுகள் ஸ்தானிகர்களிடம் கேட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [மா]

### பிரபாவை இலங்கை

[1-ம் பக்கத்தொடர்ச்சி)

ராஜீவ் கொலைக் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால், பிரபாகரனை ஒப்படைக்குமாறு இந்தியா இலங்கையிடம் எவ்வேளையிலும் கோரலாம் எனவும் அவர் தெரிவித்தார்.

இவ்விவகாரம் இரு நாடுகளிடையேயும் பெரும் சிக்கலைத் தோற்றுவிக்கலாம் என்றும் திரு. சாம் மில்லர் மேலும் தெரிவித்துள்ளார். (சி

### தெரிவுக்குழு

[1ம் பக்கத் தொடர்ச்சி]

தெரிவுக்குழுக்கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது குறித்து பலரும் கவலை தெரிவித்துள்ளனர். இந்தியாவில் புலிகள் மீதான தடையால் தெரிவுக்குழுவின் பொறுப்பு அதிகரித்தமையே இதற்குக் காரணமெனவும் தெரிவிக்கப்பட்டது, (சி-மா)

### கொலைத்திட்டம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வரலாற்றில் கொடியதோர் செய்கை எனினும் மேற்கொள்ளப்பட்ட கொலை நடவடிக்கை. துல்லியமாகத் திட்டமிடப்பட்ட செயலும், கொலையாளிகளை மூடிமறைப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட தற்கொலைக் குண்டு வெடிப்பு என்று சி.பி.ஐ. அறிக்கை தெரிவித்தது.

விடுதலைப் புலிகள் இயக்கம் அமைப்பு ரீதியாகத் திட்டமிட்டு, ராஜீவ் கொலையை நிறைவேற்றியதாக தனி நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரன் தமது சகாக்கள் சகிதம் இந்திய-இலங்கை ஒப்பந்தம் குறித்துப் புதுடில்லியில் தங்கியிருந்தபோதே, ராஜீவ் கொலை குறித்து அவர்கள் திட்டமிட்டதாகக் கூறப்பட்டுள்ளது.

இந்திய - இலங்கை ஒப்பந்தம் மூலம் 'விடுதலைப் புலிகளை இந்தியா காட்டிக்கொடுத்தமையே ராஜீவ் கொலைக்கு முக்கிய காரணம் எனவும் யாழ்ப்பாணத்தின் வடபகுதியான பலாலிப்பகுதியில் விடுதலைப்புலிகள் இயக்கத்தை சேர்ந்த 12 பேர் இலங்கை இராணுவத்தால் கொழும்பிற்கு கொண்டு செல்வதற்கு முயற்சித்த வேளையில் அவர்கள் மேற்கொண்ட தற்கொலை முயற்சியும், யாழ்ப்பாணத்தில் இந்திய அமைதிப் படை மேற்கொண்ட நடவடிக்கைகளும் ராஜீவ்காந்தி படுகொலைக்கு முக்கியகாரணங்களாக கூறப்பட்டுள்ளதோடுராஜீவ் காந்தி மீண்டும் பதவிக்கு வந்தால் இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை அமுல்படுத்துவார் என்ற அச்சமே ராஜீவ்கொலைக்கு முக்கிய காரணங்களாகும் எனவும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் கன்கோவில் மேற்கு வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1992-ம் ஆண்டு மே மாதம் 21-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post office Sri Lanka under Licence Number B/10336/81